# பாலியல் ஈர்ப்பு சார்ந்து நடத்தப்படும் தேவையற்ற உளவள மதிப்பீடுகள் நிறுத்தப்பட வேண்டும்.

*மதுரி தமிழ்மாறன், தேசிய சட்ட ஆலோசகர் – இலங்கை, சர்வதேச சட்டவல்லுனர் ஆணைக்குழு*

இலங்கை ஊடகங்களில் அண்மைக்காலத்தில் பாலியல் ஈர்ப்பு சார்ந்து நடத்தப்பட்ட உளவள மதிப்பீடு குறித்து பகிரப்பட்ட இரண்டு சம்பவங்கள், தன்பாலீர்ப்புள்ள பெண்கள், ஆண்கள், இருபாலீர்ப்புடையோர், திருநர், இடைஇலிங்கத்தவர் மற்றும் குயர் (LGBTIQ) நபர்களையும் மற்றும் அவர்களின் நட்புக் குழுக்களின் கவனத்தை ஈர்த்தது. இந்த சம்பவங்களில் இருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில், பொலிஸ் மற்றும் நீதித்துறை இன்னமும் தன்பாலீர்ப்புள்ள பாலியல் உறவுகளை உளவள ஆய்வு தேவைப்படும் ஒரு அசாதாரண நிலையாகவே கருதுகின்றன. சட்ட அமுலாக்கலுக்கு பொறுப்பான சில அதிகாரிகள் மற்றும் நீதித்துறையை சேர்ந்தவர்கள், சர்வதேச தரங்களை மீறும் வகையில் பாகுபாடான நடைமுறைகளை பின்பற்றுவதை வழமையாக செய்வது துரதிஷ்டவசமானதாகும்.

முதலாவது சம்பவம், இந்த வருடம் ஜூன் மாதம் அம்பாறை மாவட்டத்திலுள்ள அக்கரைப்பற்று பிரதேசத்தில் வசித்த தன் பெண் தோழியை காண இலங்கைக்கு வந்த இந்தியப் பெண் பற்றியது. அவளது பெண் தோழியின் தந்தை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததனால், அவர்கள் அவ்விருவரையும், ஓர்பாலீர்ப்புள்ள பாலியல் உறவில் ஈடுபட்டதற்காக கைது செய்து அக்கரைப்பற்று நீதவான் (மஜிஸ்ட்ரேட்) நீதிமன்றத்தில் முன்னிறுத்தினர். நீதிமன்றம் இவர்களை உளவள மதிப்பீட்டுக்கு உட்படுத்துமாறு கட்டளையிட்டது. ஊடகங்களில் வெளியான தகவல்களுக்கமைய மதிப்பீட்டின் பின்னர் அதே நீதிமன்றத்தில் இடம்பெற்ற விசாரணையின் பின்னர், இரண்டு பெண்களும் விடுதலை செய்யப்பட்டு இந்தியப் பெண்ணை இந்தியாவிற்கு திருப்பியனுப்புமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டு, இலங்கைப்பெண் தனது குடும்பத்தார் மற்றும் அப்பிரதேசவாசிகளிடமிருந்து பாதுகாக்கப்பட பாதுகாப்பு இல்லம் ஒன்றிற்கு அனுப்பிவைக்கப்பட்டார். அதைத்தொடர்ந்து வந்த ஊடக செய்திகள், நீதிமன்றம் இந்த உளவள மதிப்பீட்டை கட்டளையிட்டது, அப்பெண்கள் தம்மை பிரித்தால் தற்கொலை செய்துகொள்வோம் என மிரட்டியதால் எனக் கூறின. ஆனாலும் ஓர்பாலீர்ப்புள்ள பாலியல் உறவு தொடர்பான வழக்குகளில் மஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்களில் குற்றம்சாட்டப்படுவோர் உளவள மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படுத்துவது ஒரு வழக்கமாக காணப்படுகின்றது.

வெளியிடப்பட்ட மற்றுமொரு சம்பவத்தில், தன்பாலீர்ப்புள்ள ஒரு பெண், தன் குடும்பத்தினரால் வீட்டிற்குள் பலவந்தமாக தடுத்து வைக்கப்பட்டு மதஸ்தலங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, தன்பாலீர்ப்புள்ள உறவுகள் பாவம் என மீண்டும் மீண்டும் கூற கட்டாயப்படுத்தப்பட்டுள்ளார். அவரது குடும்பத்தினர் மேலும் அவரை கட்டாயமாக உளவள ஆலோசனைக்கு அனுப்புவதாகவும் அல்லது அவரது மனநலம் பாதித்திருப்பதனால் சீர்த்திருத்த நிலையமொன்றிற்கு அனுப்பி வைப்போம் எனவும் மிரட்டினர். அவரது தோழி இந்த பலவந்தமாக தடுத்து வைக்கப்பட்டிருப்பது குறித்து

பொலிஸில் முறைப்பாடு செய்த போது, அந்தப்பெண் மற்றும் அவரதுதோழி பொலிஸாரினால் மிரட்டப்பட்டனர். தன்பாலீர்ப்புள்ள அந்த பெண்ணின் குடும்பத்தினரின் வேண்டுகோளின் பேரில் பொலிஸார் அவரை அவளது உளவளம் பாதிக்கப்பட்டுள்ளது என நிரூபிக்க ஒரு உளவள மதிப்பீட்டிற்கு ஒத்துக்கொள்ளுமாறு கூறினர்.அத்துடன் தன்பாலீர்ப்புள்ள பாலியல் உறவிற்கான ஆதாரங்களை சேர்க்க, அவரது மடிக்கணினியை பொலிஸில் சமர்ப்பிக்குமாறு கூறினர். அவளது குடும்பத்தினர் அவள் மனநலம் பாதிக்கப்பட்டிருப்பதை நிரூபிக்க ஒரு சட்ட வைத்திய அதிகாரியினால் (JMO) உளவள மதிப்பீட்டிற்கு உட்படுத்துமாறு கட்டளையிடக் கோரி நீதிமன்றத்தில் வழக்கொன்றினை தாக்கல் செய்தனர்.ஒரு இடைக்கால மஜிஸ்ட்ரேட் அவ்வாறான உத்தரவினை வழங்கினார். அப்பெண்ணினது சட்டத்தரணி இதனை மேல் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தினார், மஜிஸ்ட்ரேட்டிற்கு இது குறித்து அறிவிக்கப்பட்டு அப்பெண்ணின் உளவள பாதிப்பு குறித்த எவ்வித ஆதாரமும் இல்லாததினால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

1883ம் ஆண்டின் இலங்கையின் தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவு 365 மற்றும் 365அ முறையே "இயற்கை நியதிக்கு மாறான பாலியல் உறவு" மற்றும் "பாரதூரமான இழிசெயல்களை" குற்றமாக கருதுகின்றது. தண்டனைச்சட்டக்கோவை பயன்படுத்தப்பட்டுள்ள இந்த சொற்களுக்கான எவ்வித வரைவிலக்கணத்தையும் வழங்காத போதிலும், இவ்விரண்டுபிரிவுகளும் சம்மதத்துடனான ஓர்பாலீர்ப்புள்ள பாலியல் உறவுகளை குற்றப்படுத்த பயன்படுத்தப்படுகின்றன. இதனால் குற்றவாளிகளாக தீர்க்கப்படுபவர்கள் பத்து வருடங்கள்வரை சிறைத்தண்டனை பெறக்கூடும்.

இலங்கையின் அரசியலமைப்பு சட்டத்தின், உறுப்புரை 12 அனைவரும் சட்டத்திற்கு முன்னால் சமமானவர்கள் மற்றும் அனைவருக்கும் சமமான சட்ட பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்றது. அது இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியல் கருத்து மற்றும் பிறப்பிடம் சார்ந்த பாகுபாட்டை தடை செய்கின்றது, எனினும் பாலியல் ஈர்ப்பு, பால்நிலை அடையாளம் அல்லது பாலியல் வெளிப்பாடு சார்ந்த பாகுபாட்டை தடைசெய்யவில்லை. இலங்கை அரசு கடந்த காலங்களில்,ஐக்கிய நாடுகளின் அமர்வுகளில், உறுப்புரை 12 பாலியல் ஈர்ப்பு, பால்நிலை அடையாளம் அல்லது பாலியல் வெளிப்பாடு சார்ந்த பாகுபாடின்மையையும் உள்ளடக்கியுள்ளது எனக் கூறியுள்ளது. எனினும் மேற்கூறப்பட்டுள்ளது போல வெளிப்படையான சட்டங்கள் மற்றும் அதன் அமுலாக்கல் இந்த வாதத்தை மறுக்கின்றன.

பெண்களுக்கெதிரான அனைத்துவிதமான பாகுபாடுகலளயும் ஒழிப்பதற்கான சமவாயத்தின் குழுவிற்கு 2022 மார்ச் மார்ச் மாதம், ஈக்குவல் கிரௌண்ட் நிறுவனத்தின், ரோஸானா ப்லேமர் காலதேறா இலங்கைக்கு எதிராக கொண்டுவந்த வழக்கின் தீர்வு, தன்பாலீர்ப்புள்ள பாலியல் உறவுகளை குற்றப்படுத்துவது சமவாயத்தின் பாகுபாடின்மைக்கான உரிமையை மீறுவதாகும் மற்றும் சம்மதத்துடனான தன்பாலீர்ப்புள்ள உறவுகளை குற்றமற்றதாக செய்யவேண்டுமென பரிந்துரை செய்தது.

அண்மையில் இலங்கை சட்டத்தரணிகள் சிலருக்கு சர்வதேச சட்டவல்லுனர்கள் ஆணைக்குழுவினால் நடத்தப்பட்டதொரு பயிற்சிப்பட்டறையில், பங்குபற்றியவர்கள் நீதிபதிகள் வழமையாக தன்பாலீர்ப்புள்ள பாலியல் உறவு தொடர்பில் குற்றம்சாட்டப்படும் வழக்குகளின் முதல் படியாக உளவள அல்லது உடல்ரீதியான மதிப்பீடுகளை கட்டளையிடும் மேற்கூறப்பட்ட சந்தர்ப்பங்களை போன்ற பல

சந்தர்ப்பங்களுக்கான உதாரணங்களை வழங்கினர். இது தன்பாலீர்ப்புள்ள பெண்கள், ஆண்கள் மற்றும் இருபாலீர்ப்புள்ள நபர்களை உள்ளடக்கிய அனைவருக்குமான மனித உரிமை பாதுகாப்புகள் போன்றவற்றை மீறும் ஒரு தவறான விடயமாகும். இவ்வாறான மதிப்பீடுகள், இதற்குட்படுத்தப்படும் நபர்களுக்கு உள பாதிப்புகளையும் அழுத்தங்களையும் ஏற்படுத்துகின்றது.

எவ்வாறிருப்பினும், 2021ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், இலங்கை உளவியலாளர்களின் கல்லூரி, தன்பாலீர்ப்புள்ள உறவுகள் ஒரு மனநல பாதிப்பு எனும் கருத்து ஒரு கட்டுக்கதையென கண்டனம் செய்து அது விஞ்ஞான பூர்வமான ஆதாரங்களை கருத்தில் கொண்டு, அதிகாரிகள் தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவு 365ஐ இரத்து செய்யவேண்டுமென கூறி அறிக்கை ஒன்றினை வெளியிட்டது. இது 2018ம் ஆண்டில், தன்பாலீர்ப்புள்ள பாலியல் உறவு "மனித பாலியல் உறவில் எதிர்பாலீர்ப்புள்ள பாலியல் உறவு மற்றும் இருபாலீர்ப்புள்ள பாலியல் உறவு போலவே, ஒரு சாதாரணமான பாலியல் உறவு முறையாகும்" மற்றும் பாலியல் ஈர்ப்பு எவ்வித சிகிச்சைகள் மூலமும் மாற்றப்பட முடியாது, மாறாக இவ்வாறான சிகிச்சைகள் தன்னம்பிக்கை குறைவு மற்றுகளங்கத்தை அந்த நபருக்கு உள்ளாக்கும் எனக்கூறும், இந்திய உளவியலாளர்களின் அமைப்பினால் வெளியிடப்பட்ட அறிக்கையை பிரதிபலித்தது. முறையே 1973 மற்றும் 1992ம் ஆண்டில் தன்பாலீர்ப்புள்ள பாலியல் உறவினை உளவியல் நோய்களின் பட்டியலிலிருந்து அகற்றிய, அமெரிக்க உளவியலாளர்களின் சங்கத்தினால் மற்றும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் சர்வதேச நோய் வகைப்படுத்தல் பிரிவு என்பவற்றின் நிலையை சார்ந்து இந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

இந்திய உளவியலாளர்களின் சங்கத்தினால் தன்பாலீர்ப்புள்ள பாலியல் உறவுகளை குற்றமற்றதாக்க கோரி வெளியிடப்பட்ட அறிக்கை, இந்திய உச்ச நீதி மன்றத்தினால் 2018ம் ஆண்டு சம்மதத்துடனான தன்பாலீர்ப்புள்ள பாலியல் உறவுகளை குற்றமற்றதாக்கும் வழக்கில் மேற்கோள் காட்டப்பட்டது (நவ்தேஜ் சிங் ஜொஹார் மற்றும் பலர் எ. இந்திய ஒன்றியம்). இந்த வழக்கில் இந்திய உச்ச நீதிமன்றம் மேலும் தன்பாலீர்ப்புள்ள பெண்கள் மற்றும் ஆண்கள் "அதை வெளிப்படுத்துவதன்" மூலம் சிறந்த உளநலத்தை பெறுவர் மற்றும் தம் பாலியல் ஈர்ப்பு தொடர்பில் நேர்மறையாக உணர்வர் எனவும், அத்துடன் தம் பாலியல் ஈர்ப்பை மற்றவர்களுக்கு வெளிப்படுத்த கூடிய சூழல் காணப்படுவது மற்றும் அதிகரித்த சமூக ஆதரவு போன்றவை உளநலத்திற்கு மிகவும் முக்கியமாகும் எனக் கூறியது.

LGBTIQ நபர்களுக்கு செய்யப்படும் "உளநிலை/ உடல் ரீதியான மதிப்பீடுகள்" உட்பட சம்மதமற்ற திருத்தல் சிகிச்சைகள், அவர்களின் மனித உரிமைகளை மீறுகின்றன, குறிப்பாக பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளுக்கான சமவாயத்தின் சுகாதாரத்தை உறுதிப்படுத்தும் 12ம் உறுப்புரையை மீறுவதாகவும், சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சமவாயத்தின் 7ம் உறுப்புரையின் படி இது ஒரு கொடூர, மனிதநேயமற்ற அல்லது இழிவு படுத்தும் நடத்தை அல்லது தண்டனையாக காணப்படுகின்றது மற்றும் இலங்கை அரசியலமைப்பின் 11ம் உறுப்புரையை மீறுபவையாக அமைகின்றன. சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சமவாயத்தின் 9வது உறுப்புரைக்கமைய அனைவருக்கும் தம் உடல் மற்றும் உள்ளத்தை சுதந்திரமாக அனுபவிப்பதற்கான உரிமை மற்றும் காயம், தாக்குதல்கள் இன்றி உடல் உள ரீதியான கௌரவத்தை அனுபவிப்பதற்கான சுதந்திரத்திற்கான மற்றும் பாதுகாப்பாக இருப்பதற்கான உரிமை காணப்படுகின்றது என ஐ. நா. மனித உரிமைகள்

குழு விளக்கியுள்ளது. இலங்கை இந்த இரண்டு சமவாயங்களுக்கும் கைச்சாத்திட்டுள்ள உறுப்பு நாடொன்றாகும்.

சர்வதேச மனித உரிமை சட்டத்தை பாலியல் ஈர்ப்பு மற்றும் பால்நிலை அடையாளத்துடன் வகைப்படுத்தி அமுல்படுத்தும் யோக்ஜகார்த்தா கோட்பாடுகளின் (2007) 18ம் உறுப்புரை, பாலியல் ஈர்ப்பு மற்றும் பாலியல் அடையாளம் என்பன மருத்துவ நிலைகள் அல்ல அதனால் அவை சிகிச்சைக்குட்படுத்தவோ, குணமாக்கவோ, கட்டுப்படுத்தக்கூடியதான நிலையல்ல எனக்கூறுகின்றது. உறுப்புரை 32 (YP +10யினால் 2017ம் ஆண்டு இணைக்கப்பட்டது) இதுபோலவே உடல் மற்றும் உள ரீதியான கௌரவம், தீர்மானங்கள் செய்வதற்கான உரிமை மற்றும் சுய உறுதி கொண்டிருப்பதற்கான உரிமை என்பன ஒருவரின் பாலியல் ஈர்ப்பு மற்றும் பால்நிலை அடையாளம் என்பவற்றை விடுத்து அனைவர்க்கும் காணப்பட வேண்டும் என்பதை உறுதிப்படுத்துகின்றது.

அது குடும்பத்தினரின், சுகாதார சேவையாளரின் அல்லது நீதித்துறை உட்பட அதிகாரிகளினாலோ ஒருவரின் பாலியல் ஈர்ப்பு காரணமாக கோரப்படும் உளவள மதிப்பீடுகளதேவையற்றதாகும். நீதிமன்றங்களில் இவ்வாறான உத்தரவுகள் முழுமையாக நீதிபதியின் தற்றுணிவின்படி வழங்கப்படுகின்றன, ஏனெனில் இது தொடர்பான சட்டங்களோ, கொள்கைகளோ இல்லை. இவ்வாறான தேவையற்ற உளவள மதிப்பீடுகள் நிறுத்தப்பட வேண்டும், ஏனெனில் அவை சர்வதேச மனித உரிமை தரங்களுக்கு அமைவாக காணப்படாது அவற்றை மீறுவதாக அமைகின்றன.